# முதன்மை உயர் கல்வி நிறுவனங்களில் 225 அரசுப் பள்ளி மாணவர்கள்

## முதல்வர் பாராட்டு



முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்கு செல்லும் அரசு பள்ளி மாணவர்களுக்காக, சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற பாராட்டு விழாவில் அவர்களுக்கு மடிக்கணினி, சான்றிதழ்களை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சென்னை ஐ.ஐ.டி. இயக்குநர் வி.காமகோடி உள்ளிட்டோர்.

**சென்னை, ஆக. 9:** நாட்டின் முதன்மை உயர் கல்வி நிறுவனங்களில் பயில தேர்வாகியுள்ள தமிழக அரசுப் பள்ளி மாணவர்கள் 225 பேருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு தெரிவித்தார்.

'உயர் கல்வி நிறுவனங்களில் அரசுப் பள்ளி மாணவர்கள் நுழையும் போதுதான் சமூகநீதி முழுமை பெறுகிறது' என அவர் கூறினார்.

ஐஐடி, என்ஐடி போன்ற நாட்டின் முதன்மை உயர் கல்வி நிறுவனங்களுக்கு தமிழகத்திலிருந்து தேர்வாகிச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழா சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், முன்னணி கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற 225 மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ், மடிக்கணினி வழங்கி பேசியதாவது: பள்ளிக் கல்வித் துறை வரலாற்றில் இது மிகவும் முக்கியமான நாளாகும். பல்வேறு முன்னெடுப்புகள் பள்ளிக் கல்வித் துறையால் மேற்கொள்ளப்பட்டதன் பலனாக தற்போது அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 225 மாணவர்கள் நாட்டின் முதன்மை உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்கு தகுதி பெற்றது பெருமையாக உள்ளது.

கடந்த ஆண்டு 75 மாணவர்கள் சென்ற நிலையில் நிகழாண்டு அந்த எண்ணிக்கை உயர்ந்துள்ளது. இதன் மூலம் அரசுப் பள்ளிகளின் கல்வித் தரம் உயர்ந்துள்ளதை நாம் அறியலாம். இவ்வாறு உயர்கல்வி நிறுவனங்களில் அரசுப் பள்ளி மாணவர்கள் நுழையும்போதுதான் சமூகநீதி முழுமை பெறுகிறது.

மாவட்டந்தோறும் இயங்கிவரும் மாதிரிப் பள்ளிகளின் சிறந்த செயல்பாட்டின் விளைவால் இத்தனை மாணவர்கள் முதன்மை கல்வி நிறுவனங்களுக்கு தேர்வாகியுள்ளனர். இந்த மாணவர்களின் கல்விச் செலவை அரசே ஏற்றுள்ளது. அரசு ஏற்படுத்தித் தரும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி மாணவர்கள் வாழ்வில் முன்னேற வேண்டும் என்றார் அவர்.

**ஐஐடி இயக்குநர் காமகோடி:** சென்னை ஐஐடி இயக்குநர் வி.காமகோடி பேசுகையில், சென்னை ஐஐடியில் 492 அரசுப் பள்ளி மாணவர்கள் பிஎஸ் தரவு அறிவியல் படிப்பை பயின்று வருகின்றனர். இன்னும் 2 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை ஆயிரமாக உயரும். தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளில் 9 முதல் பிளஸ் 2 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு ஆகஸ்ட் 3-ஆம் வாரம் முதல் எலெக்ட்ரானிக்ஸ் ஃபவுண்டேஷன் பயிற்சி படிப்பு தொடங்கப்பட உள்ளது என்றார்.

**தைவான் பல்கலை.யில் வாய்ப்பு:** தைவான் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பயில்வதற்கு தேர்வாகியுள்ள தருமபுரி அரசுப் பள்ளி மாணவி ஜெயஸ்ரீ பேசுகையில், 'நான் முதல்வன் திட்டத்தில் சிறப்புப் பயிற்சி பெற்று தைவான் நாட்டின் குன்ஷான் பல்கலை.யில் இளநிலை பொறியியல் படிக்க தேர்வாகியுள்ளேன். கிருஷ்ணகிரி மாவட்டம், பண்ணந்தூர் எனும் குக்கிராமத்தில் பிறந்து கடல் கடந்து வேறொரு நாட்டுக்குச் சென்று கல்வி பயிலும் வாய்ப்பு கிடைத்துள்ளது என்றார்.

விழாவில் அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறைச் செயலர் காகர்லா உஷா, இல்லம் தேடிக் கல்வித் திட்ட சிறப்புப் பணி அலுவலர் க.இளம்பகவத், தமிழக மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா.சுதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மாதிரிப் பள்ளிகள் அதிகரிக்கப்படும்: அமைச்சர்

தமிழகத்தில் மாதிரிப் பள்ளிகள் அதிகரிக்கப்படும் என அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: ஐஐடி போன்ற முன்னணி உயர் கல்வி நிறுவனங்களில் தமிழக அரசுப் பள்ளி மாணவர்கள் சேருவது மிகவும் அரிதாக இருந்தது.

அந்த நிலை தற்போது மாற்றப்பட்டு 225 மாணவர்கள் நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுள்ளனர். தொடர்ந்து மாதிரிப் பள்ளிகள் மூலம் சிறப்புப் பயிற்சி அளித்து அனைத்து மாணவர்களையும் நல்ல நிலைக்கு கொண்டு செல்வதே எங்கள் இலக்காகும்.

அதேபோல், இனி வரும் காலங்களில் மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப மாதிரிப் பள்ளிகள் அதிகரிக்கப்படும்.

பழங்குடி மாணவர்களுக்கும் தனி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. புதுச்சேரியை போன்று அரசுப் பள்ளி மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கைக்கான இடஒதுக்கீட்டை 10 சதவீதமாக உயர்த்தும் விவகாரத்தில் முதல்வர்தான் முடிவெடுக்க வேண்டும் என்றார் அவர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சென்னையில் 49–ஆவது கம்பன் விழா நாளை தொடக்கம்



49–ஆவது கம்பன் விழாவை முன்னிட்டு, சென்னையில் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய கம்பன் கழக துணைத் தலைவர் நல்லி குப்புசாமி.

**சென்னை, ஆக. 9:** சென்னை கம்பன் கழகத்தின் 49–ஆவது கம்பன் விழா சென்னை மயிலாப்பூர் ஏவிஎம் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது.

இது குறித்து சென்னை கம்பன் கழகத்தின் துணைத் தலைவர் நல்லி குப்புசாமி, இணைச் செயலர் சாரதா நம்பி ஆரூரன் ஆகியோர் சென்னையில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது:

சென்னை கம்பன் கழகம் நடத்தும் 49–ஆம் ஆண்டு கம்பன் விழா ஆக.11, 12, 13 ஆகிய தேதிகளில் சென்னை மயிலாப்பூர் ஏவிஎம் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் இவ்விழாவுக்காக அமைக்கப்பட்டுள்ள 'இனியவன்' அரங்கில் நடைபெறவுள்ளது. இந்த ஆண்டு கம்பன் விழா 'கம்பனின் மாறுபட்ட மேன்மைகள்' என்கிற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும்.

**விருதுகள் வழங்குதல்:** வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள தொடக்க விழாவுக்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன் தலைமை வகித்து, சிறப்புரையாற்றி, ஆழ்வார்கள் ஆய்வு மையம் நிறுவியுள்ள கம்பர் விருதினை முனைவர் தெ.இராசகோபாலனுக்கும், நீதியரசர் மு.மு.இஸ்மாயில் நிறுவியுள்ள பேராசிரியர் சுவாமிநாதன் நினைவுப் பரிசினை மு.அப்துல் சமது–க்கும், நீதியரசர் மு.மு.இஸ்மாயில் நினைவுப் பரிசை கவிஞர் முத்துலிங்கத்துக்கும், கம்பன் குறித்த சிறந்த நூலுக்கான அ.ச.ஞா. நினைவுப் பரிசினை முனைவர் முகிலை இராசபாண்டியனுக்கும் வழங்கவுள்ளார். மேலும் கலை, இலக்கியத் துறைகளில் புகழுடன் விளங்கும் பதினாறு பேருக்கு பரிசுகள் வழங்கப்படும். முன்னதாக சென்னை கம்பன் கழகத்தின் தலைவர் இராமவீரப்பன் வரவேற்று பேசவுள்ளார்.

**மாணவர்களுக்கு பரிசளிப்பு:** விழாவையொட்டி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பள்ளி, கல்லூரி மாணவ-மாணவிகளை சென்னைக்கு வரவழைத்து திருக்குறள், சிலப்பதிகாரம், சீறாப்புராணம், கம்பராமாயணம், பெரியபுராணம், சீவகசிந்தாமணி ஆகிய ஆறு இலக்கியங்களில் பேச்சுப்போட்டி, ஒப்பித்தல் போட்டி, கட்டுரை மற்றும் கவிதைப் போட்டி ஆகியவை நடத்தப்பட்டன. இவற்றில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கம்பன் விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

**கவியரங்கம்– வழக்காடு மன்றம்:** இரண்டாவது நாளான சனிக்கிழமை காலை 11.45 மணிக்கு கவிஞர் மரபின் மைந்தன் முத்தையா தலைமையில் கவியரங்கம், மாலை 5 மணிக்கு 'கம்பனின் சொல்வன்மை' என்ற தலைப்பில் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் உரையாற்றவுள்ளார். மூன்றாவது நாளான ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு முனைவர் தெ.ஞானசுந்தரம் 'கம்பன் காட்டும் மாறுபட்ட மேன்மைகள்' என்ற தலைப்பில் பேசவுள்ளார். தொடர்ந்து காலை 11 மணிக்கு சுகி சிவம் நடுவராக பங்கேற்கும் வழக்காடு மன்றம் நடைபெறும்; மாலை 4 மணிக்கு 'அலகிலா விளையாட்டுடையார்' என்ற தலைப்பில் பாரதி கிருஷ்ணகுமார் உரையாற்றவுள்ளார்.

**இலங்கை ஜெயராஜ் தலைமையில்...** இதையடுத்து மாலை 5 மணிக்கு 'இராவணன் வீழ்ச்சியைப் பெரிதும் விரைவுபடுத்தியது தன்னை வியந்தமை... தன் பிழை உணராமை...' என்ற தலைப்பில் இலங்கை ஜெயராஜ் தலைமையில் பட்டிமன்றம் நடைபெறும். இதில் முனைவர் கிருங்கை சேதுபதி, பேராசிரியர் பர்வீன் சுல்தானா உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர். நிறைவாக, சென்னை கம்பன் கழக துணைத் தலைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் நன்றியுரையாற்றவுள்ளார் என அவர்கள் தெரிவித்தனர்.

அப்போது கம்பன் கழகத்தின் பொருளாளர் புதுகை தருமராசன், துணைச் செயலர்கள் எஸ்.விஜயகிருஷ்ணன், வழக்குரைஞர் பாலசீனிவாசன், செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.பி.முத்துராமன், முனைவர் மணிமேகலை கண்ணன், முனைவர் வாசுகி கண்ணப்பன், முனைவர் உலகநாயகி பழனி, மருத்துவர் பிரியா ராமச்சந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# ‘கேரளம்’ எனப் பெயர் மாற்ற தீர்மானம்: பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றம்

**திருவனந்தபுரம், ஆக.9:** கேரளத்தின் பெயரைக் 'கேரளம்' என அதிகாரபூர்வமாக மாற்ற நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கும் தீர்மானம் அந்த மாநில சட்டப் பேரவையில் ஒருமனதாக புதன்கிழமை நிறைவேற்றப்பட்டது.

மாநிலத்தின் பெயரைக் 'கேரளம்' என மாற்ற நடவடிக்கை எடுக்க மத்திய அரசிடம் கோரும் தீர்மானத்தை மாநில முதல்வர் பினராயி விஜயன் சட்டப்பேரவையில் புதன்கிழமை கொண்டு வந்தார்.

அந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் முதல்வர் பேசுகையில், 'சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்து மலையாள மொழி பேசும் மக்களுக்காக ஒன்றுபட்ட கேரளத்தை உருவாக்க வேண்டிய தேவை வலுவாக இருந்து வந்துள்ளது. ஆனால், அரசமைப்பின் முதல் அட்டவணையில் நமது மாநிலத்தின் பெயர் 'கேரளா' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசமைப்புச் சட்டத்தின் 3-ஆவது பிரிவின்கீழ் மாநிலத்தின் பெயரைக் 'கேரளம்' என்று திருத்தம் செய்து அரசமைப்பின் 8-ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மொழிகளிலும் 'கேரளம்' என்று பெயர் மாற்றம் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை கோரும் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்ற இந்தப் பேரவையிடம் கேட்டுக் கொள்கிறேன்' என்றார்.

இந்தத் தீர்மானத்தை எதிர்க்கட்சியான காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி கூட்டணி, எந்தவிதமான திருத்தங்கள் மற்றும் மாற்றங்களைப் பரிந்துரைக்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டது.

# சந்திரயான்–3 பயணிக்கும் நிலவின் சுற்றுப்பாதை தொலைவு குறைப்பு

**சென்னை, ஆக. 9:** நிலவின் ஈர்ப்பு விசைக்குள் பயணித்து வரும் சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுப்பாதை தொலைவை குறைக்கும் இரண்டாம் கட்ட முயற்சியை வெற்றிகரமாக இஸ்ரோ மேற்கொண்டது.

நிலவின் தென் துருவத்துக்கு அருகே தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திரயான்-3 விண்கலத்தை சுமார் ரூ.615 கோடியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்தது. இந்த விண்கலம் எல்விஎம்-3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த ஜூலை 14-ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது.

அதன் பின்னர், புவி வட்டப் பாதையில் வலம் வந்த விண்கலம், கடந்த 1-ஆம் தேதி புவி ஈர்ப்பு விசையில் இருந்து விலக்கப்பட்டு, நிலவை நோக்கிய பாதைக்கு மாற்றப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக கடந்த 5-ஆம் தேதி நிலவின் சுற்றுப்பாதைக்குள் சந்திரயான்-3 பயணிக்கத் தொடங்கியது. இதையடுத்து நிலவின் சுற்றுப்பாதை தொலைவை படிப்படியாகக் குறைத்து விண்கலத்தை மெதுவாக தரையிறக்குவதற்கான பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி சந்திரயான்-3 விண்கலம் பயணித்து வரும் சுற்றுப் பாதை தொலைவு நிலவின் ஈர்ப்பு விசைக்குள் இரண்டாவது முறையாக புதன்கிழமை மதியம் 1.30 மணிக்கு குறைக்கப்பட்டது. அப்போது, உந்து கலனில் உள்ள திரவ எரிவாயு கருவி இயக்கப்பட்டு விண்கலத்தின் சுற்றுப்பாதை வெற்றிகரமாக மாற்றப்பட்டது.

தற்போது குறைந்தபட்சம் 174 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 1,437 கி.மீ. தொலைவும் கொண்ட நிலவின் வட்டப் பாதையில் விண்கலம் பயணித்து வருகிறது. இதே நுட்பத்தில் விண்கலத்தின் தொலைவு மேலும் இருமுறை குறைக்கப்பட்டு, அதன் சுற்றுப் பாதை மாற்றப்படும்.

அதன்மூலம் நிலவின் தரைப்பகுதிக்கும், விண்கலத்துக்குமான உயரம் குறைக்கப்படும். அதைத் தொடர்ந்து உந்து கலனில் இருந்து லேண்டர் சாதனம் ஆகஸ்ட் 14-ஆம் தேதி விடுவிக்கப்பட்டு, திட்டமிட்டபடி ஆகஸ்ட் 23-ஆம் தேதி நிலவில் மெதுவாக விண்கலம் தரையிறக்கப்படும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

# திருட்டுப்போன 7.25 லட்சம் கைப்பேசிகள் 'சன்சார் சாதி' இணையதளம் மூலம் முடக்கம்

## மத்திய அரசு தகவல்

**சென்னை, ஆக. 9:** நாடு முழுவதும் திருட்டுப்போன 7.25 லட்சம் கைப்பேசிகள், மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசு அறிமுகப்படுத்திய 'சன்சார் சாதி 'என்ற இணையதளம் மூலம் முடக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய அரசின் தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் அந்தந்த மாநில அரசுகளின் சைபர் குற்றத் தடுப்புப் பிரிவு இணைந்து கடந்த மே மாதம் ceir.sancharsaathi.gov.in என்ற இணையதளத்தை அறிமுகம் செய்திருந்தது.

இதுவரை திருடப்பட்ட கைப்பேசிகளில் இருக்கும் சிம் கார்டுகள் மட்டும் முடக்கப்பட்டு வந்த நிலையில் கைப்பேசி முடக்கும் புதிய வசதி இதன்மூலம் பொதுமக்களுக்குக் கிடைத்துள்ளது.

திருடுப்போன கைப்பேசிகள், மத்திய அரசின் சாதன அடையாள பதிவின் (சிஇஐஆர்) மூலமாக இணையதளம் வாயிலாக முடக்கலாம். அதேபோல் யார் பெயரில் எத்தனை சிம் கார்டுகள், கைப்பேசிகள் இருக்கின்றன என்பதையும் இந்த இணையதளம் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஒரு முடக்கப்பட்ட கைப்பேசியில் புதிய சிம்கார்டு நுழைத்ததும் காவல்துறை, புகார் அளித்தவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். கைப்பேசி நிறுவனத்துக்கும் குறுஞ்செய்தி அனுப்பப்படும். பழைய கைப்பேசிகளை வாங்கும்போது, அதன் (ஐஎம்இஐ ) எண் மூலம், அது எந்த அளவுக்கு பழைய கைப்பேசி, திருடப்பட்டதா என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

இந்த இணையதளம் வாயிலாக இதுவரை 7.25 லட்சம் கைப்பேசிகள் முடக்கப்பட்டுள்ளன. திருடப்பட்ட கைப்பேசிகளை இந்த இணையதளம் வாயிலாக அதிக அளவில் கண்டுபிடித்த மாநிலமாக தெலங்கானா உள்ளது. அங்கு இதுவரை 5 ஆயிரம் கைப்பேசிகள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அடுத்தடுத்த இடங்களில் கர்நாடகம் மற்றும் ஆந்திரம் உள்ளன.

# கீழடி அகழாய்வில் சுடுமண் பாம்பு தலை உருவம்!

**மானாமதுரை, ஆக. 9:** கீழடியில் நடைபெற்று வரும் அகழாய்வில் புதன்கிழமை சுடுமண்ணால் செய்யப்பட்ட பாம்பு தலை உருவம் கண்டெடுக்கப்பட்டது.



கீழடி அகழாய்வில் புதன்கிழமை கண்டெடுக்கப்பட்ட சுடுமண் பாம்பு தலை உருவம்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகேயுள்ள கீழடியில் 9 -ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை கீழடியில் 9 குழிகள் தோண்டப்பட்டன. இவற்றிலிருந்து ஏற்கெனவே தங்க அணிகலன், சுடுமண் காளை, ஆட்டக் காய்கள், கண்ணாடி மணிகள், செப்பு ஊசி, படிக எடைக் கல் என 200-க்கும் மேற்பட்ட தொல் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன.

இந்த நிலையில், புதன்கிழமை தோண்டப்பட்ட குழியில் 190 செ.மீ. ஆழத்தில் அதிகளவில் பானை ஓடுகள் கண்டறியப்பட்டன. அவற்றில் கைகள் மூலம் சுடுமண்ணால் செய்யப்பட்ட பாம்பின் தலை உருவம் ஒன்று இருந்தது. அது 6.5 செ.மீ. நீளம், 5.4 செ.மீ. அகலம், 1.5 செ.மீ. தடிமன் கொண்டது. இதன் கண்கள், வாய் ஆகிய பகுதிகள் மிக நேர்த்தியாக இருந்தன. மேலும், சொரசொரப்பான மேல் பரப்புடன் சிவப்பு நிறம் பூசப்பட்டிருந்தது. இந்தத் தகவலை தொல்லியல் துறையினர் தெரிவித்தனர்.